**FIRST INFORMATION REPORT**
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109405

1. District மாவட்டம் : Ramanathapuram PS: காவல்நிலையம் Ramanathapuram V & AC Year: ஆண்டு 2023 FIR No.: மு.த.அ. எண் 06/2023 Date: நாள் 07.04.2023

2. (i) Act சட்டம்: PC Act 1988 as Sections பிரிவுகள்: 7 of PC Act 1988
(ii) Act சட்டம்: amended in 2018 Sections பிரிவுகள்: as amended in 2018.
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 06.04.2023 Date to : நாள் வரை 07.04.2023
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 16.15 Time to : நேரம் வரை 02.00
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 07.04.2023 Time நேரம் : 02.30
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time நேரம் :

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Inside the campus of PWD Guest House. 1/2 km North East.
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டவர்/ தகவல் தந்தவர் பெயர் M. Ramachandran (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் K. Murugesan
(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் Indian. (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Deputy Superintendent of police. (g) Address : முகவரி Vigilance & Anti Corruption Ramanathapuram Detachment.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) ① Kannan S/o Chinnayan, Executive Engineer, PWD, Ramanathapuram.
② S. KUMARESAN S/o Subbaiah, Drafting officer, o/o of the EE, Sivagangai District ③ Muniyasamy S/o Rathinam, Driver, o/o of the EE, PWD, Ramanathapuram

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையிட்டவரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
No delay.

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவைப்பெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவைப்பெனில் தனித்தாளில் இணைக்கவும்)

எதிரிகளின் பட்டியல்:

1) திரு.சி.கண்ணன், வயது 59/2023 த/பெ சின்னையா, செயற் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டட (க & ப) கோட்டம், இராமநாதபுரம், இராமநாதபுரம் மாவட்டம்.

2) திரு.சு.குமரேசன், வயது 58/2023 த/பெ சுப்பையா, வரை தொழில் நுட்ப அலுவலர், செயற் பொறியாளர் அலுவலகம், பொதுப்பணித்துறை, கட்டட (க & ப) கோட்டம், இராமநாதபுரம், இராமநாதபுரம் மாவட்டம்.

3) திரு.ரெ.முனியசாமி, வயது 54/2023 த/பெ ரெதத்தினம், வாகன ஓட்டுனர், செயற் பொறியாளர் அலுவலகம், பொதுப்பணித்துறை, கட்டட (க & ப) கோட்டம், இராமநாதபுரம், இராமநாதபுரம் மாவட்டம்.

சமர்ப்பிக்கிறேன் – இன்று 07.04.2023 ஆம்தேதி அதிகாலை 02.30 மணிக்கு இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.மு.இராமச்சந்திரன் அவர்கள் 06.04.2023ம் தேதியன்று

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .......................... பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb impression of the Complainant / Informant.
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Name: பெயர் M.KUMARESAN.
Rank: நிலை Inspector of police.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

07.04.2023 at 03.45

**இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு குற்ற எண் 6/2023 பிரிவு 7 ஊழல் தடுப்புச் சட்டம் 1988 (திருத்தச்) சட்டம் 2018 வழக்கின் தொடர்ச்சி.**

இராமநாதபுரம் மாவட்டம், பொதுப்பணித்துறை விருந்தினர் மாளிகையின் வளாகத்தில் வைத்து இராமநாதபுரம் செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை (கட்டடம் மற்றும் பராமரிப்பு) உட்கோட்டம் அவர்களின் பொலிரோ TN 63 G 0876 என்ற அரசு வாகனம் மற்றும் அவ்வளாகத்தில் அமைந்துள்ள மேற்படி இராமநாதபுரம் செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை (கட்டடம் மற்றும் பராமரிப்பு) உட்கோட்டம் அவர்களின் வாகனம் நிறுத்தும் கட்டிடத்தின் மேல் உள்ள ஓய்வு அறையில் நடத்தப்பட்ட திடீர் சோதனை சம்பந்தமான அறிக்கை, பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள், கைப்பற்றப்பட்ட மொத்தப் பணம் ரூபாய் 32,68,570/– மற்றும் கைப்பற்றப்பட்ட ஆவணங்களுடன் கொடுத்த எழுத்து மூலமான புகாரைப் பெற்று இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண் 6/2023 பிரிவு 7 ஊழல் தடுப்புச் (திருத்தம்) சட்டம் 2018 படி வழக்கு பதிவு செய்தேன். வாதியின் புகார் பின்வருமாறு, அனுப்புநர் திரு.மு.இராமச்சந்திரன், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, இராமநாதபுரம். பெறுநர் திரு.எம்.குமரேசன், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, இராமநாதபுரம், அய்யா, பொருள்: திடீர் சோதனை – 06.04.2023ம் தேதியன்று இராமநாதபுரம் பொதுப்பணித்துறை விருந்தினர் மாளிகை வளாகத்தில் அமைந்துள்ள வாகனம் நிறுத்தும் கட்டிடத்தின் மேல் உள்ள ஓய்வு அறையில் திடீர் சோதனை நடத்தப்பட்டது – மேல் நடவடிக்கை எடுக்க கோருவது – தொடர்பாக. பார்வை : எனது திடீர் சோதனை அறிக்கை, நாள் 06.04.2023. இன்று 06.04.2023 ஆம் தேதி பகல் சுமார் 15.00 மணியளவில் இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவிற்கு, இராமநாதபுரம் செயற் பொறியாளர், பொதுப்பணித்துறை, (கட்டடம் மற்றும் பராமரிப்பு) அலுவலகத்தில் பணிபுரியும் அதிகாரிகள் அரசாங்கத்தின் பல்வேறு சேவைகளை வழங்குவதற்கு ஒப்பந்ததாரர்கள் மற்றும்

பொதுமக்களிடமிருந்து லஞ்சமாகப் பணம் வாங்கி அதை இராமநாதபுரம் செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை (கட்டடம் மற்றும் பராமரிப்பு) உட்கோட்டம் அவர்களின் பொலிரோ TN 63 G 0876 என்ற அரசு வாகனத்தின் மூலம் கடத்தி செயற் பொறியாளர், பொதுப்பணித்துறை, (கட்டடம் மற்றும் பராமரிப்பு) அலுவலகத்திற்கு பின்புறம் அமைந்துள்ள பொதுப்பணித்துறைக்கு சொந்தமான விருந்தினர் மாளிகை வளாகத்தில் தென்கிழக்கு மூலையில் அமைந்துள்ள வாகனம் நிறுத்தும் கட்டிடதத்திற்கு மேல் உள்ள அவரது ஓய்வு அறையில் பதுக்கி வைக்க உள்ளதாக கிடைத்த இரகசிய தகவலின் பேரில் இன்று 16.00 மணியிலிருந்து மேற்படி வாகனத்தை தொடர்ந்து கண்காணித்ததில், மேற்படி பொலிரோ TN 63 G 0876 வாகனமானது பொதுப்பணித்துறைக்கு சொந்தமான விருந்தினர் மாளிகை வளாகத்தில் தென்கிழக்கு மூலையில் அமைந்துள்ள வாகனம் நிறுத்தும் கட்டிடத்தில் அமைந்துள்ள ஓய்வு அறைக்கு முன்பாக மேற்படி வாகனம் நிறுத்தப்பட்டிருந்தது. மேற்படி அரசுசாட்சிகள் சகிதமாக மேற்படி இடத்திற்கு 16.15 மணியளவில் வருகை தந்தபோது அதன் அருகே அதன் ஓட்டுனர் திரு.R.முனியசாமி நின்று கொண்டிருந்தார். அப்போது அவரிடம் அரசு சாட்சிகளை அறிமுகப்படுத்திக் கொண்டு அவ்வாகனத்தை அரசு சாட்சிகளின் முன்னிலையில் திடீர் சோதனையிட்டதில் சந்தேகப்படும்படியான பணமோ மற்றும் ஆவணங்களோ ஏதும் கிடைக்கவில்லை. மேற்படி ஓட்டுநரை உடற் பரிசோதனை செய்த போது அவரிடமிருந்த ரூபாய் 1,100/- பற்றி கேட்க தன் சொந்த செலவிற்காக வைத்திருப்பதாக சரியான விளக்கம் கூறியதால் மேற்படி பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும், அவருடன் வேறு யாரும் இங்கு வந்தனரா என்று விசாரிக்க, அவரும் அவ்வாகனத்தில் செயற் பொறியாளர் திரு.C.கண்ணன் மற்றும் வரை தொழில் நுட்ப அலுவலர் திரு.S.குமரேசன் ஆகியோர்களை அழைத்துக் கொண்டு தற்பொழுது தான் வந்தோம் என்றும், அவர்கள் மாடியில் உள்ள செயற் பொறியாளரின் ஓய்வு அறைகு சென்று விட்டதாக கூறினார். மேலும் மேற்படி நபர்கள் இந்த வாகனத்திலிருந்து பொருள் அல்லது பணம் ஏதும் எடுத்து சென்றனரா என்று விசாரித்த போது திரு.சு.குமரேசன் என்பவர வாகனத்திலிருந்து இறங்கும் போது பணக்கட்டுகள்

அடங்கிய வெளிர்பச்சை நிற பார்சல் கவர் மற்றும் ஆவணங்கள் அடங்கிய மஞ்சள் நிற பை ஆகியவற்றை கொண்டு சென்றார் ஆனால் அதில் எவ்வளவு பணம் உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது பொதுவாக எங்கள் அலுவலகத்தில் வரும் பொதுமக்கள் மற்றும் ஒப்பந்ததாரரிடம் வசூலிக்கும் பணத்தை அவ்வப்போது மேற்படி செயற்பொறியாளரின் ஓய்வு அறையில் பதுக்கி வைக்கப்படும் என்ற விபரம் மட்டும் எனக்கு தெரியும் என்று கூறினார். மேலும் அவரிடம் அரசு வாகனம் TN63 G 0876 வாகனத்தின் ஆர்.சி.புத்தகம் மற்றும் லாக் புக்கை பற்றி விசாரிக்க அதற்கு அவர் ஆர்.சி புத்தகத்தின் நகலை கொடுத்து விட்டு லாக் புக்கானது தற்போது என்னிடம் இல்லை எனவும் அலுவலகத்தில் இருப்பதாகவும் கூறினார். அதனைத் தொடர்ந்து அரசு சாட்சிகள் உட்பட பாரட்டி சகிதம் அனைவரும் மேற்படி கார் நிறுத்தும் கட்டிடத்தின் மேல் இருந்த ஓய்வு அறைக்கு சென்று அங்கிருந்த செயற் பொறியாளர் திரு.கண்ணன் மற்றும் குமரேசன், வரைதொழில் நுட்ப அலுவலர் அவர்களிடம் அறிமுகப்படுத்திக் கொண்டு மேற்படி சோதனை விவரத்தை தெரிவித்துக் கொண்டு அவர்களிடம் விசாரித்த போது செயற்பொறியாளர் திரு.கண்ணன் இந்த அறையானது நான் ஓய்வு எடுக்கவும் சில நேரங்களில் அலுவலக கோப்புகளை பார்வையிடுவதற்காகவும் பயன்படுத்தும் அறையாகும் எனவும் இந்த அறையின் கீழ் உள்ள வாகன நிறுத்துமிடமானது எனது அலுவலக வாகனத்தை நிறுத்துவதற்கு நான் பயன்படுத்துவதாகவும், மேலும் திரு.முனியசாமி என்பவரை காட்டி விசாரிக்க மேற்படி நபர் தனது வாகன ஓட்டுநராக கடந்த 6 மாதங்களாக பணிபுரிந்து வருவதாகவும் கூறினார். மேற்படி திரு.முனியசாமி என்பவரை வாகனத்தில் நிற்க சொல்லி விட்டு தானும் தனது அலுவலகத்தில் பணிபுரியும் வரை தொழில் நுட்ப அலுவலராக பணிபுரியும் குமரேசன் என்பவரும் சற்று முன்பு தான் தனது ஓய்வு அறைக்கு வந்தோம் எனக் கூறினார். அதை தொடர்ந்து மீண்டும் அரசு சாட்சிகள் முன்பாக திரு.கண்ணன், செயற்பொறியாளரது வலது பக்க பேண்ட் பாக்கெட்டினை சோதனை செய்ய அதில் ரூபாய் 3,550/- மற்றும் மணிகண்டன் ரூ.3,95,074/-, Land Revenue, RO -9-30 என்ற குறிப்புகள் அடங்கிய 3 துண்டுச் சீட்டுகள் இருந்தது. மேற்படி பணத்தை பற்றி விசாரிக்க, அவர் தனது சொந்த

செலவிற்காக வைத்திருந்த பணம் என்று கூறியதால் அப்பணம் ரூபாய் 3,550/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி 3 குறிப்பு சீட்டுகள் தொடர்பாக விசாரித்ததற்கு சரியான விளக்கம் தராததால் அவைகள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும், வரை தொழில் நுட்ப அலுவலர் திரு.குமரேசன் என்பவரது வலது பக்க பேண்ட் பாக்கெட்டினை சோதனை செய்ய அதில் ரூபாய் 596/- இருந்தது. மேற்படி பணம் பற்றி அவரிடம் கேட்டதற்கு, அது தனது சொந்த செலவிற்காக வைத்திருப்பதாக கூறியதால் மேற்படி பணம் ரூபாய் 596/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும், அவரது இடது பக்க சட்டைப் பாக்கெட்டினை சோதனை செய்ய அதில் கார்த்தி, பூபதி மற்றும் மணிகண்டன், நிசாமுதீன் என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்ட குறிப்புகள் அடங்கிய இரண்டு வெள்ளைப் பேப்பர்கள் இருந்தது அது தொடர் விசாரணைக்காக மகஜரில் கைப்பற்றப்பட்டது.

மேலும், மேற்படி அறையானது முதல் மாடியில் வடக்கு நோக்கி வாசல் கொண்டதாக அமைந்துள்ளது. அந்த அறையினை பார்வையிட்டதில் அந்த அறையின் ஓரத்தில் கருப்பு சூட்கேஸ் இருந்தது அதை சோதனையிட அதில் ஏதும் பொருட்கள் இல்லை. மேலும் அங்கிருந்த டேபிளின் அவரது பணி தொடர்பான ஆவணங்கள் இருந்தது அது குறித்து விசாரித்த போது தான் சில நேரங்களில் இந்த அறையை அலுவலக வேலைக்காக பயன்படுத்துவது உண்டு எனக் கூறினார். எனவே வழக்கு விசாரணைக்காக அந்த டேபிளின் மீது இருந்த கீழே கண்ட ஆவணங்கள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

| | |
|---|---|
| 1 | Explanatory note to Accompany RE 2022-2023 and BE 2022-2023 – (Page No.1 to 40) |
| 2 | Buildings (C&M) Sub division, Karaikudi (page No 1 to 14) |
| 3 | Public Works Department Buildings (C&M) Division, Ramanathapuram (Page No.1 to 10) |
| 4 | Buildings (C&M) Division, Ramanathapuram R.E. 2022-2023 and B.E. 2023-2024 (Pages 1 to 14) |

| | |
|---|---|
| 5 | RE 2022-2023 & B.E. 2023 -2024 Plan Scheme Buildings (C&M) Division, Sivagangai (Page 1 to 14) |
| 6 | DEMAND No.3902 (Page 1 to 12) |
| 7 | அனுப்புநர் : பொறிஞர் கே.பி.சத்தியமூர்த்தி, பெறுநர் ம.பூ.ஞானசிங் பிரபு என்பவரின் கடித எண் தவஅ/முவஅ/கோ6 (பதிவு)/2022, நாள் 23.12.2022 (Page 1 to 10) |
| 8 | பள்ளிக் கல்வித்துறை இடிக்கப்பட்ட பழைய பள்ளிக் கட்டடங்களின் விபரங்கள் (Page 1 to 9) |
| 9 | Non starter as on 30.09.2022 (Page 1 to 4) |
| 10 | Over all budget details for the year 2022-2023 (Page 1 to 6) |
| 11 | Buildings (C&M) Division, Sivagangai Demand No.3902 (Page 1 to 8) |
| 12 | October month bill (Page 1 to 2) |
| 13 | Explanatory Note for RE 2022-2023 (Page 1 to 2) |
| 14 | கடித எண் / உ.செ.பொ – ஈ1/கோ 120/6514/2022, நாள் 11.10.2022 (Page 1 to 6) |
| 15 | Proposal for RE 2022 -2023 and BE 2023-2024 on Capital works Buildings C&M Division, Sivagangai. Demand No.3902 (Page 1 to 8) |
| 16 | Buildings (C&M) Division, Ramanathapuram progress report as on 22.1.22022 (Page 1 to 60) |
| 17 | Judicial Magistrate Bungalow plan xerox (Page 1 to 4) |
| 18 | Forwarding slip to accompany the L.S. agreement No. /2022-2023 Special Repairs to Govt. High School building at Velanoor in Ramanathapuram district. |
| 19 | Forwarding slip to accompany the L.S. agreement No. /2022-2023 Special Repairs of painting to Govt. High School building at Kumbaram in Ramanathapuram district. |
| 20 | Forwarding slip to accompany the L.S. agreement No. /2022-2023 Special Repairs of painting to Govt. High School at Kanchirankudi in Ramanathapuram district. |

| | |
|---|---|
| 21 | Forwarding slip to accompany the L.S. agreement No. /2022-2023 Special Repairs to painting to Govt. H.S.S. building at Thiru Uthirakosamangai in Ramanathapuram district (pages 1 to 234) |
| 22 | Forwarding slip to accompany the L.S. agreement No. /2022-2023 Special Repairs to painting to Govt. Higher Secondary School at Kadugusandai in Ramanathapuram district. |
| 23 | Forwarding slip to accompany the L.S. agreement No. /2022-2023 providing cupboard arrangement in H2B Section, sitting chair arrangement in collectorate building at master plan complex in Ramanathapuram district. |
| 24 | Forwarding slip to accompany the L.S. agreement No. /2022-2023 Special Repairs to painting to Govt. High School at Palanivalasai in Ramanathapuram district (Page 1 to 234) |
| 25 | Forwarding slip to accompany the L.S. agreement No. /2022-2023 Special Repairs to PDJ Chambar combined Court building at MPC in Ramanathapuram district. |
| 26 | Notes number 19 (Page No.1 to 74) |
| 27 | Notes number 19 (Page No.1 to 74) |

அதனைத் தொடர்ந்து, அந்த அறைக்கு தென்புறம் உள்ள படுக்கை அறையில் சாட்சிகள் மற்றும் மேற்படி அலுவலர்கள் முன்பாக சோதனை செய்யப்பட்டது அப்போது அங்கு போடப்பட்டிருந்த மரக் கட்டிலில் இருந்த மெத்தையின் மீதிருந்து கைப்பற்றப்பட்ட பணம் கீழ்கண்டவாறு.

| | | |
|---|---|---|
| 1 | ரூ.500 x 282 = ரூ.1,41,000/- | ரூ.1,41,000.00 |
| 2 | வெள்ளைப் பேப்பரில் NMR என்று சுற்றப்பட்ட ரூ. 500 x 20 = ரூ.10,000/- | ரூ.10,000.00 |
| 3 | சுப்ரமணியன் 1,50,000/- settled 6.4.23 என வெள்ளைப் பேப்பரில் எழுதப்பட்டு ரூ.500 x 292 = ரூ.1,46,000/- | ரூ.1,46,000.00 |

| | | |
|---|---|---|
| 4 | 500 ரூபாய் கட்டுகள் கொண்ட ஒரு பண்டலை பிரித்துப் பார்க்க அதில் ரூ.500 x 790 = ரூ.3,95,000/- இருந்தது. | ரூ.3,95,000.00 |
| 5 | பிரவுன் கலர் கவரில் 14 இரண்டாயிரம் ரூபாய் நோட்டுக்கள் மற்றும் 102 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக மொத்தம் ரூபாய் 79,000/– இருந்தது. | ரூ.79,000.00 |
| 6 | ஒரு வெள்ளை நிற பேப்பரில் நிஜாமுதீன் என்று ஆங்கிலத்திலும், மற்றும் குமரதேசிகன என்று சிவப்பு மையினால் எழுதப்பட்ட குறிப்பு சீட்டுடன் சுற்றப்பட்ட பணம் ரூ. 500 x 220 = ரூ.1,10,000/- | ரூ.1,10,000.00 |
| 7. | பசீர் டைல்ஸ் ஹவுஸ் என்ற வெள்ளை கவரில் இருந்த பணம் ரூபாய் 500 x 130 = ரூ. 65,000/- | ரூ.65,000.00 |
| | ஆக மொத்தம் ரூபாய் | ரூ.9,46,000.00 |

மேலும் கட்டில் மெத்தையில் இருந்து EE Rs.29,500/-, MMR Rs.1,18,000/-, Ravisankar Rs.2,36,283/- ,மணிகண்டன் ரூ.5,77,161/– பரமக்குடி GH Rs.3,00,000/-, மேகநாதன் கீழக்கரை சார்பதிவாளர் அலுவலகம் ரூ.1,19,000/–, குமார தேசிகன், 06.04.2023, நிசாமுதீன ரூ.4,91,245/– போன்ற குறிப்புகள் அடங்கிய 8 துண்டு சீட்டுகள் சந்தேகத்திற்கு இடமளிப்பதால் அவைகளை தொடர விசாரணைக்காக மகஜரில் கைப்பற்றப்பட்டது.

மேலும் அதனைத் தொடர்ந்து, கட்டிலில் காணப்பட்ட மேற்படி பணக்கட்டுகளின் அருகில் P.Senthilkumar,(M.E.,) என்று எழுதப்பட்ட வெளிர்பச்சை நிற பார்சல் கவர் மற்றும் அருள்மிகு ஸ்ரீ சதுரகிரி சுந்தர மகாலிங்க சுவாமி என்று அச்சிடப்பட்ட மஞ்சள் நிற பை காணப்பட்டது அது குறித்து செயற்பொறியாளரிடம் விசாரிக்க மேற்படி வெளிர்பச்சை நிற பார்சல் கவரில் ஒப்பந்ததாரரிடம் லஞ்சமாக பெற்ற பணத்தை வைத்து கொண்டு வந்ததாகவும், மஞ்சள் நிற பையில் அலுவலக ஆவணங்களை கொண்டு வந்ததாகவும் கூறினார்.

மேற்படி பணம் அடங்கிய வெளிர் பச்சை நிற பார்சலானது அரசு வாகனத்திலிருந்து திரு.சு.குமரேசன் என்பவர் மூலம் எடுக்கப்பட்டு எனது அறைக்கு தான் வரும் போது தன்னுடன் சேர்ந்து வந்து தன்னிடம் கொடுத்ததாகவும், மேற்படி பணத்தை நாங்கள் எண்ணுவதற்காக கட்டிலில் எடுத்து வைத்த போது தாங்கள் சோதனைக்காக வந்து விட்டீர்கள் என்றும் தெரிவித்தார். மேற்படி வெளிர்பச்சை நிற பாரசல் கவர் மற்றும் அருள்மிகு ஸ்ரீ சதுரகிரி சுந்தர மகாலிங்க சுவாமி என்று அச்சிடப்பட்ட மஞ்சள் நிற பை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மேற்படி அறையின் தென்மேற்கு மூலையில் வடக்கு பார்த்தவாறு அமைந்துள்ள மரப் பீரோவினை சோதனை செய்ய அதிலிருந்து கீழ்கண்டவாறு பணம் கைப்பற்றப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1 | வலது பக்க டிராயரில் இருந்த பணம் ரூபாய் ரூ.500 x 1300 = ரூ. 6,50,000/- மற்றும் 200 x 200= 40,000/- | ரூ.6,90,000.00 |
| 2 | இடது பக்க டிராயரில் மஞ்சள் பையில் இருந்த பணம்<br>500 x 2052 = 10,26,000.00<br>200 x 148 = 29,000.00<br>100 x 8 = 800.00<br>20 x 2 = 40.00 | 10,56,440.00 |
| | ஆக மொத்தம் ரூபாய் | 17,46,440.00 |

அதனைத்தொடர்ந்து மேற்படி படுக்கை அறையின் கிழக்கு பக்கம் இருந்த சமையல் அறையில் கிழக்கு பார்த்தவாறு உள்ள பூஜை அலமாரியை அரசு சாட்சிகள் முன்னிலையில் சோதனை செய்ய கீழ்கண்டவாறு கைப்பற்றப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1 | 500 x 500 = 2,50,000.00<br>500 x 482 = 2,41,000.00 | 4,91,000.00 |

அதனைத் தொடர்ந்து, மேற்படி செயற் பொறியாளர் தங்கியிருக்கும் ஓய்வு அறைக்கு வெளியில் நின்று கொண்டிருந்த செயற் பொறியாளர் திரு.கண்ணனுக்கு சொந்தமான MARUTHI SUZUKI ALTO TN 63 P 6568 என்ற வாகனத்தை சோதனை செய்ய அதிலிருந்து கைப்பற்றப்பட்ட பணம் கீழ்கண்டவாறு

| | | |
|---|---|---|
| 1 | வாகனத்தின் டிக்கியில் ஸ்டெப்னிக்கு கீழ மறைத்து வைக்கப்பட்ட நிலையில் கைப்பற்றப்பட்ட பணம்<br>500 x 129 = 64,500<br>200 x 10 = 2,000 | ரூ.66,500.00 |
| 2 | காரின் உள் டேஸ் போர்டிலிருந்து கைப்பற்றப்பட்ட பணம்<br><br>2000 x 7 = 14,000<br>500 x 9 = 4,000,<br>100x 1= 100<br>20 x 1 =20,<br>10 x 1 = 10 | 18,630.00 |

மேலும், மேற்படி வாகனத்தின் பின் சீட்டிலிருந்து கீழே கண்ட அலுவலக வேலை தொடர்பான ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது.

| | |
|---|---|
| 1 | Forwarding slip to accompany the L.S. agreement No. /2022-2023 Providing paver block and get arrangements to PDJ Bunglow at Ramanathapuram (Pages 1 to 232) |
| 2 | Forwarding slip to accompany the L.S. agreement No. /2022-2023 Special Repairs to GHS Building at Perunkulam in Ramanathapuram (Pages 1 to 232) |
| 3 | Forwarding slip to accompany the L.S. agreement No. /2022-2023 Providing Glass partition and G I shed arrangements to Collector's Camp Office at Ramanathapuram distirct (Pages 1 to 224) |
| 4 | Forwarding slip to accompany the L.S. agreement No. /2022-2023 Annual maintenance of Supply of Labour for RDO and Taluk Office at Ramanathapuram April 2022 – March 2023 (Pages 1 to 226) |

| | |
|---|---|
| 5 | Forwarding slip to accompany the L.S. agreement No. /2022-2023 Providing Carpet and interior arrangement to old Collectorate meeting Hall at Master Plan Complex in Ramanathapuram distirct (Pages 1 to 232) |
| 6 | Forwarding slip to accompany the L.S. agreement No. /2022-2023 Special Repairs of Water supply arrangement and those and window in Collector's Bunglow at Ramanathapuram (Pages 1 to 230) |

இந்நிலையில், முன்னதாக இச்சோதனை தொடர்பாக மாவட்ட தணிக்கை குழு அதிகாரியை தொலைபேசியில் முயற்சித்தும் அவரை தொடர்பு கொள்ள இயலாததால் அதன் பின்பு மீண்டும் 17.00 மணிக்கு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரை தொடர்பு கொண்டு மேற்படி திடீர் சோதனை நடைபெற்று வருவது சம்பந்தமாக தெரிவிக்க, அவர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.பா.ஜோ.மார்ட்டின் ராஜன் என்பவரை சோதனைக்கு உதவியாக அனுப்பி வைப்பதாக தெரிவித்தார். அதன் பேரில் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் அவர்கள் சுமார் 17.30 மணிக்கு மேற்படி சோதனையிடத்திற்கு ஆஜரானவரிடம் இதுவரை நடந்த சோதனை விபரங்களை விபரித்து மேற்படி சந்தேக அலுவலர்கள் மற்றும் ஏற்கனவே இருந்த அரசு சாட்சிகளிடம் அறிமுகப்படுத்திய பின்பு இனிவரும் சோதனையின் நடைமுறையில் உடன் இருக்க கேட்டுக் கொண்டதற்கிணங்க அவரும் மேற்படி பின்தொடர்ந்த சோதனையின் போது உடன் இருந்தார்.

மேலும் இச்சோதனையின் அடுத்த கட்ட நடவடிக்கையாக அந்த கார் செட்டிற்கு முன்பு சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் நிறுத்தியிருந்த பிற வாகனங்களை சோதனை செய்த போது நம்பர் பிளேட் இல்லாத புதிய பெலினோ வெள்ளை நிற காரினை பற்றி விசாரிக்கையில் அது மேற்படி செயற்பொறியாளரின் ஓட்டுநர் முனியசாமி என்பவரது கார் என தெரிய வந்ததால் அரசு சாட்சிகளின் முன்பு சோதனையிட்டதில் ஆட்சேபனைக்குரிய பணமோ பொருளோ இல்லை என்பதால் ஏதும் கைப்பற்றப்படவில்லை. மேலும் அங்கு நின்று கொண்டிருந்த மற்றொரு சிவப்பு நிற மாருதி ஆல்டோ கார் TN 65 AM 7070 பற்றி விசாரிக்க பொதுப்பணித்துறை முதல் நிலை ஒப்பந்ததாரரான திரு.நாகேந்திர பாண்டியன்

என்பவருக்கு சொந்தமானது என தெரிய வந்ததால் மேற்படி நபரை தொடர்பு கொண்டு வரவழைக்கப்பட்டு அரசு சாட்சிகள் முன்னிலையில் மேற்படி கார சோதனையிட்டதில் ஆட்சேபனைக்குரிய பணமோ பொருளோ இல்லை என்பதால ஏதும் கைப்பற்றப்படவில்லை. இந்த சோதனையின் போது சம்மந்தப்பட்ட அரசு அலுவலர்களான மூன்று நபர்களையும் அரசு சாட்சிகள் முன்பு விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டது. மேலும் மேற்படி சோதனையின் போது கண்டறியப்பட்ட ரூ.32,68,570/– மற்றும் துண்டு சீட்டுகளுக்கான ஆதாரம் பற்றி விசாரிக்க மேற்படி பணம் அனைத்துமே பொது மக்கள் மற்றும் ஒப்பந்ததாரரிடமிருந்து பெறப்பட்ட லஞ்சமாக பெறப்பட்ட பணம் மற்றும் அதற்கான துண்டு சீட்டுகள் என தெரிவித்ததால் சோதனையின் இறுதியாக மேற்படி ஆவணங்கள அரசுசாட்சிகளின் ஒப்பத்துடனும் மற்றும் மொத்தப் பணம் ரூபாய் 32,68,570/– ஆகியவற்றையும் இராமநாதபுரம் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் அரசு சாட்சிகள் முன்னிலையில் மேல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் சோதனை இன்று 06.04.2023ம் தேதி மாலை 16.15 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 07.04.2023ஆம் தேதி அதிகாலை 02.00 மணிக்கு முடிக்கப்பட்டது. மேலும், இந்த சோதனையின் அடிப்படையில் திரு.C.கண்ணன், செயற் பொறியாளர், பொதுப்பணித்துறை (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) இராமநாதபுரம் கோட்டம், 2) திரு.S.குமரேசன், வரை தொழில் நுட்ப அலுவலர், செயற் பொறியாளர் அலுவலகம், பொதுப்பணித்துறை (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) இராமநாதபுரம் கோட்டம் மற்றும் 3) திரு.ரெ.முனியசாமி, ஓட்டுனர், செயற் பொறியாளர் அலுவலகம், பொதுப்பணித்துறை (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) இராமநாதபுரம் கோட்டம் ஆகியோர்கள் குற்றச் செயலில் ஈடுபட்டதற்கான முகாந்திரம் இருப்பதால் அவர்கள் மீது முறையான வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தும் வகையில் இந்த திடீர் சோதனையின் போது கைப்பற்றப்பட்ட ஆவணங்கள், கணக்கில் காட்ட இயலாத மொத்தப் பணம் ரூபாய் 32,68,570/–, பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள் மற்றும் திடீர் சோதனை சம்மந்தமான எனது அறிக்கை ஆகியவற்றை உடனடியாக வழக்கு பதிவு செய்து உரிய நடவடிக்கை எடுக்க உயர் அதிகாரிகளின் ஒப்புதல் பெற்று தங்களிடம்

ஒப்படைக்கிறேன். (ஒப்பம்) மு.இராமச்சந்திரன், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, இராமநாதபுரம். 07.04.2023. மேலும், உயர் அதிகாரிகளின் வாய்மொழி ஒப்புதல் பெற்று மேற்படி எதிரிகள் மீது இன்று 07.04.2023ம் தேதி அதிகாலை 03.00 மணிக்கு இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு குற்ற எண் 6/2023 u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018ன்படி குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது. பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் சோதனையின் போது தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கையின் அசல், வாக்குமூலங்கள் ஆகியவற்றை மாண்புமிகு தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம்/சிறப்பு நீதிபதி, இராமநாதபுரம் அவர்களுக்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

07/04/2023.

INSPECTOR OF POLICE
VIGILANCE AND ANTI-CORRUPTION
RAMANATHAPURAM.